e–Library என்று சொல்லக்கூடிய புதிய திட்டங்களை அரசு கொண்டுவந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக நூலகத்திற்கு என்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்தப் பணிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13417—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் குடிக்காடு பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கூவத்தூர்-1 முழுநேர நியாய விலைக் கடை 984 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவந்தது. இக்கடையிலிருந்து கூவத்தூர், குடிக்காடு பகுதியைச் சேர்ந்த 180 குடும்ப அட்டைகள் உட்பட 326 குடும்ப அட்டைகளைப் பிரித்து கே.என். குப்பத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. தற்போது கூவத்தூர் குடிக்காடு பகுதியில் மற்றொரு பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள்*

2019 ஜூலை 9]

மனதைவிட்டு மறையாமல் என்றென்றும் தமிழர்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீளாத் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழகத்தில் நல்லாட்சி நடத்துவதோடு, தமிழகத்தை வலுவோடும், பொலிவோடும் வழிநடத்தி வரும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத் துணையாக நிற்கின்ற துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். துலாக்கோல் போல் நடுநிலை தவறாது சபையை நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். 9 ஆண்டுகளாக கூட்டுறவுத் துறையைச் செம்மையாக நடத்தி, 9—வது ஆண்டாக கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றிய கூட்டுறவுத் துறையின் மறுபேராக விளங்குகின்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கே.என். குப்பம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கூவத்தூர் குடிக்காடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது அவசியமானதாகும். கே.என். குப்பத்திலிருந்து குடிக்காடு மிக அதிக தூரத்தில் உள்ளது. மேலும், கூவத்தூர் குடிக்காடு பகுதியில் 180 குடும்ப அட்டைகள் உள்ளன. பிரிக்கப்படும் கே.என். குப்பத்திலும் போதுமான குடும்ப அட்டைகள் உள்ளன. அங்குள்ள 180 குடும்பங்கள் 2 கி.மீ.—க்குமேல் நடந்து சென்று பொருட்களை வாங்கக்கூடிய நிலையில் உள்ளனர். எனவே, அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, கூவத்தூர் குடிக்காடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமானதுதான். இந்தச் சங்கம் ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடையை நடத்துகிறது. அந்த முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, இன்னொரு பகுதிநேர நியாய விலைக் கடையையும் நடத்திக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 326*

கார்டுகள் இருக்கின்றன; தற்போது 180 கார்டுகளைக் கொண்டு, கூவத்தூர் குடிக்காடு பகுதியில் இன்னொரு பகுதிநேர நியாய விலைக் கடையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தூரம் குறைவாக இருந்தாலும், அது கிராமமாக இருப்பதால், ஒரு கடையிலிருந்து பிரித்து இன்னொரு கடையை ஆரம்பிக்க வேண்டுமென்று உறுப்பினர் சொல்கிறார். ஒரு முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்குமேல் திறக்க முடியாது. மேலும், தாய்க் கடையை வாரத்தில் 4, 5 நாட்கள் திறப்பது வழக்கம்; பகுதிநேர நியாய விலைக் கடையை வாரத்தில் 3 நாட்கள் திறப்பது வழக்கம். ஆனால், இன்னொரு பகுதிநேர நியாய விலைக் கடையை திறக்கும்பட்சத்தில், வாரத்தில் 2, 2 நாட்கள்தான் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் திறக்க முடியும்; தாய்க் கடையை 3 நாட்கள்தான் திறக்க முடியும் என்ற சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிதிச் சுமை இல்லாத பட்சத்தில் நிறைவேற்றலாம்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களெல்லாம் குறைந்த நிதியாதாரத்தைக் கொண்டு அரசுக்கு இரு கரங்களாக இருந்து இந்தப் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. சாதாரண ஏழையெளிய மக்கள், கிராமப்புற மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு உதவிகரமாக, இந்தியாவிலேயே இன்றைக்கு முன்னுதாரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு இந்தப் பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறது. இந்தியாவிலேயே மிகப் பெரிய சிறந்த பெயரை நாம் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட இந்தத் துறையின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் மேலும் ஒரு கடையைத் திறப்பதற்கு துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆணையைப் பெற்று, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர்

அவர்களுக்கு நான் நன்றியைக் கூறிக்கொள்வதோடு, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், முத்துசேர்வாமடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் இல்லாததால், புதிய கட்டடம் கட்டுவதற்கும், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மீன்சுருட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடத்திற்கு 2, 3 கடைகளைக் கட்டித் தருகிறோம். அது போதுமானதாக இல்லை. எனவே, கூட்டுறவுத் துறைமூலம் நியாய விலைக் கடைகளைக் கட்டித் தர அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதையும் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சங்கங்களுக்காக இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும், மற்றொரு வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கும்பட்சத்தில், கூட்டுறவு வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிதியிலிருந்து கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு துறை ரீதியாக பதிவாளர் அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுப்பதற்கு உறுதியாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறை நியாய விலைக் கடைகளைக் கட்ட வேண்டுமென்றால் போதிய நிதியாதாரம் கிடையாது. பொதுவாக பொது விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் குறைந்த நிதியாதாரத்தைக் கொண்டு செயல்படுகின்றன. எனவேதான், அரசு பல்வேறு வகைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு

நிதியிலிருந்தோ, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, கட்டிக் கொடுக்க முன்வரும் எந்தவொரு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோ கட்டிக் கொடுக்கலாம் என்பது போன்ற வழிவகைகளைச் செய்திருக்கிறது. அரசுதான் அதைப் பரிசீலிக்க வேண்டும். எனவே, சங்கங்கள் மூலமாக நியாய விலைக் கடைகளைக் கட்டுவது என்பது இயலாத காரியம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, வேங்கடமங்கலம் ஊராட்சி, ரத்தினமங்கலம் கிராமத்தில் 2016 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து நியாய விலைக் கடை கட்டப்பட்டு, அப்போதைய அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இரண்டு நாட்கள் மட்டுமே பொருட்கள் வழங்கப்பட்டன; பிறகு, இதுநாள் வரை அந்தக் கடை திறக்கப்படவில்லை. அதனால் அப்பகுதி மக்கள் நெடுந்தூரம் நடந்து சென்று நெடுஞ்சாலையைக் கடக்கும்போது விபத்துகள் ஏற்படுவதால், விரைவில் அந்த நியாய விலைக் கடையைத் திறந்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரி வரலட்சுமி அவர்கள் இந்தச் சபையிலே ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். நான் positive ஆகச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அதாவது, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு அதில் விருப்பமில்லை என்கிறார்கள். அதுதான் பிரச்சினை. அதனால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களும் சரி, யாராக இருந்தாலும் சரி, இந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும்போதே, எங்களோடும்

2019 ஜூலை 9]

பேசி, துறை ரீதியாக எங்கள் அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு, இந்த இடத்தில் கட்டலாமா, கட்டினால், அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிந்து கட்டினால் நன்றாக இருக்கும். சில இடங்களில் கடைகள் அமைவதை மக்கள் விரும்புவதில்லை. சில விஷயங்கள் clash ஆகின்றன. மிகவும் தூரத்தில் இருக்கிறது; பாதுகாப்பில்லாத தன்மை எல்லாம் இருக்கிறது. அதனால்தான் இந்தமாதிரி நிலை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் கேள்வி கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கடையைத் திறப்பதற்கு என்ன வழிவகை இருக்கிறது என்பது குறித்து துறை ரீதியாக உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சகோதரிக்கு நிச்சயமாக நல்ல பதிலாக அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

துணை மின் நிலையம்

***39075—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், அ. கோவில்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அ. கோவில்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு